அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை இல. 23/92 எனது இல. எஸ் எஸ்/பீசீ/1-8(எவீ)

அரசாங்க நிருவாக மாகாண சபைகள்,
உள்நாட்டலுவல்கள் அமைச்சு,
சுதந்திரச் சதுக்கம்,
கொழும்பு - 07.
15.09.1992

அமைச்சுக்களின் செயலாளர்கள்,
பிரதான செயலாளர்கள்,
திணைக்களங்களின் தலைவர்கள்,
அரசாங்க அதிபர்கள்,
பிரதேசச் செயலாளர்கள் யாவருக்கும்.

## பகுதிச் செயலாளர்களுக்கான
## நிதியளிப்பு, கணக்கு, அறிக்கையிடல் நடவடிக்கை முறைகள்

1992 ஆம் ஆண்டுக்குரிய செலவின மதிப்பீட்டில், அரசாங்கத்தினது பின்வரும் பணிகள் தொடர்பில், அரசாங்கத்தின் அந்தந்த அமைச்சுக்கள், திணைக்களங்களின் கீழ், நிதி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

(1) ஓய்வூதியங்கள்
(11) உணவு முத்திரைகள்
(111) சனசக்தி
(1V) பாடசாலை மதிய உணவு

ஆண்டு இறுதியளவில் இப்பணிகள் பகுதிச் செயலாளர்களுக்குப் பன்முகப்படுத்தப்படவுள்ளன. 1992.05.21 தேதியிட்ட 21/92 ஆம் இலக்க அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கையின்படி ஒவ்வொரு மாவட்டத்திலும் வெகு விரைவில் முன்னோடிப் பகுதிச் செயலாளர் அலுவலகம் ஒன்று ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

02. நிதி ஆண்டின் நடுப்பகுதியில், பகுதிச் செயலகங்களுக்குத் தற்போதுள்ள அமைப்பினுள்ளேயே சுதந்திரமாகத் தொழிற்படுவதற்கு புதிய கணக்கீட்டு, அறிக்கையிடல் முறைமையொன்றை அறிமுகஞ் செய்ய இயலாது என்ற உண்மை நிலையின் நோக்கில், 1992 மதிப்பீடுகளில் ஏற்பாடு செய்த, தற்போது நடைமுறையில் உள்ள கணக்கீட்டு அறிக்கையிடல் முறைமையைத் தொடர்ந்து வைத்திருப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. ஆனால் பகுதிச் செயலக மட்டத்தில் பன்முகப்படுத்திய பணிகளைச் செயற்படுத்தி நிறைவேற்றுவதற்கு சில நிருவாக ஒழுங்குகள் ஆக்கப்பட்டுள்ளன.

03. இந்த நோக்கத்துக்குத் திறைசேரி கச்சேரிகளுக்குத் தொடர்ந்து நிதியை விடுவிக்கும். கச்சேரிகள் இப்பணத்தை கட்டுநிதி முறைமை அடிப்படையில் ஒவ்வொரு மாவட்டத்திலும் இனங்கண்ட 22 முன்னோடிப் பகுதிகளுக்குப் பகிர்ந்தளித்து, பகுதிச்

செயலகங்களினால் கச்சேரிகளுக்கு வழங்கப்படும தகவல்கள், ஆவணங்கள் மூலம் தயாரிக்கப்படும் மாதாந்தக் கச்சேரிக் கணக்குகளினூடாக அவற்றுக்குக் கணக்குக் காட்டும். இதன்படி, 1992 ஆம் நிதி ஆண்டில் எஞ்சியுள்ள காலப் பகுதிக்கு விதித்துரைக்கப்பட்டுள்ள இடைக்கால நடவடிக்கைகள் வருமாறு:

(1) பகுதிச் செயலகங்களுக்கு மூன்று மார்க்கங்களூடாக நிதி வழங்கப்படும.

(அ) அரசாங்க அதிபர்கள்
(ஆ) பிரதான செயலாளர்கள்
(இ) அரசாங்கத் திணைக்களங்கள்/அமைச்சுக்கள்

(11) அரசாங்க அதிபர்களும், பிரதான செயலாளர்களும் பகுதிச் செயலகங்களுக்கு, அவற்றின் செயல் நோக்கில் வரும் செலவின விடயங்கள் ஒவ்வொன்றினதும் கீழான ஒதுக்கீடுகளை மாதாந்தம் விடுவிப்பர். அவற்றுக்குச் சந்தர்ப்பத்துக்கு ஏற்றவாறு திறைசேரி அல்லது மாகாண சபைகள், அந்த மாதத்துக்குரிய உறுதியளிப்புக்கான காசோலையுடன் நிதியங்களை விடுவிக்கும். வழங்கப்பட்ட ஒவ்வொரு கட்டுநிதியத்திலிருந்து செலவிடப்படாமல் மீதம் ஏதும் இருந்தால் அது, கட்டுநிதியம் மீதான செலவினப் பத்திரங்களைத் தயாரிக்கையில், வழங்கிய மூலத்திடம் திருப்பிச் செலுத்தப்படும்.

(111) பகுதிச் செயலாளரும், ஏதாவது பிற மூலத்திலிருந்து தான் பெற்ற பணம் அனைத்துக்கும், அப்பணத்தை வழங்கிய அந்தந்த மூலங்களுக்கு கணக்குக் காட்டுதல் வேண்டும.

(1V) இந்தப் பிரேரணைக்குச் செயல் வலு கொடுப்பதற்கு, ஒவ்வொரு பகுதிச் செயலகங்களின் பொருட்டு இரண்டு வங்கிக் கணக்குகள் ஆரம்பிக்கப்படுதல் வேண்டும. அத்துடன், இரண்டு வங்கிக் கணக்குகள் ஒவ்வொன்றுக்கும் இரண்டு தனித்தனியான காசேடுகள் பகுதிச் செயலகங்களில் பின்வருமாறு பேணப்படுதல் வேண்டும்.

(அ) பன்முகப்படுத்திய பணிகள், மீதான செலவினம்
வங்கிக் கணக்கு இல. 1, காசு ஏடு இல. 1
(ஆ) பாரித்த பணிகள் மீதான செலவினம் (பிரதான செயலாளருக்குக் கணக்குக் காட்டத்தக்கது.)
வங்கிக் கணக்கு இல. 2, காசு ஏடு இல. 2
(இ) பன்முகப்படுத்தப்பட்ட பணிகள் பொருட்டு திறைசேரி ஒவ்வொரு பகுதிச் செயலாளருக்கும் மிக அண்மையில் உள்ள இலங்கை வங்கியின் அல்லது மக்கள் வங்கியின் கிளையில் வங்கிக் கணக்கு ஒன்றை ஆரம்பிக்க அதிகாரமளிக்கும். பாரித்த பணிகளுக்கான வங்கிக் கணக்கு பிரதான செயலாளரது அங்கீகாரத்துடன் ஆரம்பிக்கப்படுதல் வேண்டும்.

(v) இறைவரிச் சேகரிப்புகள் யாவும் தொடர்புடைய வங்கிக் கணக்குகளில் வரவு வைக்கப்பட்டு வாரந்தோறும் முழுமையாக, சந்தர்ப்பத்துக்கு ஏற்றவாறு, ஒன்றில் அரசாங்க அதிபருக்கு அல்லது மாகாண சபையின் பிரதான செயலாளருக்கு அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும். வாராந்தக் கூற்றுப் பணங்கள் வரவு வைக்கப்படும் இறைவரித் தலைப்புகள் போன்றவற்றைக் குறித்துக்காட்டுதல் வேண்டும்.

(vi) நிதியளிப்பு முகவர்கள், பகுதிச் செயலாளருக்கு விடுவிக்கப்படும் பணத்துக்குப் பின்வருமாறு கணக்குப் பேணுவர்.

| <u>நிதியளிப்பு முகவர்</u> | <u>அறிக்கையிடல் / கணக்கிடல்</u> |
|---|---|
| (அ) அரசாங்க அதிபர் | பகுதிச் செயலாளர் பணம் செலுத்திய ஆவணங்களைக் கட்டுநிதிக் கணக்குடன் திறைசேரிக்குத் தனது மாதாந்தக் கணக்குகளினூடாக செலவினத்துக்கான கணக்குகளை அடுத்த மாதத்தின் வேலை செய்யும் முதல் 7 நாட்களுக்குள் அரசாங்க அதிபருக்கு அனுப்பி வைத்தல் வேண்டும். பணம் செலுத்தியதற்கான அவ்வாவணங்களை செலவினத் தலைப்பு நிகழ்ச்சித் திட்டம், செலவு விடயக் குறியீடு, விபரங்கள் போன்றவற்றின் விபரங்களையும் ஒவ்வொரு செலவு விடய விபரங்களின் கீழ் செலவிட்ட தொகைகளையும் காசு மீதி ஏதும் இருப்பின் அதன் தொகையையும் குறித்துக் காட்டுதல் வேண்டும். |
| (ஆ) பிரதான செயலாளர் | பகுதிச் செயலாளர் மாகாணத்தின் பிரதான செயலாளருக்கு அறிக்கை சமர்ப்பிப்பார். பிரதான செயலாளர் மாகாண ஆளுநர் விதித்துரைத்த நடவடிக்கை முறையின்படி செலவினத்துக்கான கணக்கைக் காட்டுவார். |

......./04

(இ) ஏனைய திணைக்களங்களின் தலைவர்கள்

பகுதிச் செயலாளர் பணம் செலுத்திய ஆவணங்களைக் கட்டுநிதிக் கணக்குடன், திறைசேரிக்குத் தனது மாதாந்தப் பொழிப்பினூடாக செலவினத்துக்கான கணக்கினைக் காட்டும் அரசாங்கத் திணைக்களங்களுக்கு அனுப்பி வைத்தல் வேண்டும். பணம் செலுத்தியதற்கான அவ்வாவணங்கள், செலவினத் தலைப்பு, நிகழ்ச்சித் திட்டம், செலவு விடயக் குறியீடு, விபரங்கள் போன்றவற்றின் விபரங்களையும் ஒவ்வொரு செலவு விடய விபரங்களின் கீழ் செலவிட்ட தொகைகளையும் காசு மீதி ஏதும் இருப்பின் அதன் தொகையையும் குறித்துக் காட்டுதல் வேண்டும்.

04. பன்முகப்படுத்திய பணிகளின் பொருட்டு வங்கிக் கணக்குகளைத் திறப்பதற்கான விண்ணப்பங்கள், நிதி ஒழுங்குவிதி 381 இன் நியதிகளின்படி, இந்த அமைச்சினூடாகத் திறைசேரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

05. பகுதிச் செயலகங்கள், தனியான நிதிக் கைநூல் ஒன்று விதித்துரைக்கப்படும் வரையில், அரசாங்க நிதி ஒழுங்கு விதிகள், தாபன விதிக் கோவை ஆகியவற்றையும் காலாந்தரங்களில் திறைசேரியும் மாகாண சபைகளின் ஆளுநர்களும் விதித்துரைக்கும் ஏனைய ஏற்பாடுகளையும் பின்பற்றுதல் வேண்டும்.

06. இந்தச் சுற்றறிக்கை திறைசேரியின் சம்மதத்துடன் வழங்கப்படுகிறது.

ஒப்பம்: பெரகும் விஜேசிங்க

பதில் செயலாளர்,

அரசாங்க நிருவாக, மாகாண சபைகள், உள்நாட்டலுவல்கள் அமைச்சு.